வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மார்ச் - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020
FWC

| தரம் :- 13 (2020) | இந்து சமயம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 5 | 11) 2 | 21) 1 | 31) 3 | 41) 4 |
| 02) 4 | 12) 4 | 22) 2 | 32) 1 | 42) 1 |
| 03) 4 | 13) 1 | 23) 3 | 33) 4 | 43) 2 |
| 04) 5 | 14) 3 | 24) 5 | 34) 4 | 44) 5 |
| 05) 3 | 15) 4 | 25) 5 | 35) 1 | 45) 3 |
| 06) 4 | 16) 2 | 26) 5 | 36) 3 | 46) 5 |
| 07) 2 | 17) 1 | 27) 1 | 37) 3 | 47) 2 |
| 08) 5 | 18) 5 | 28) 1 | 38) 2 | 48) 3 |
| 09) 3 | 19) 1 | 29) 2 | 39) 2 | 49) 4 |
| 10) 5 | 20) 2 | 30) 1 | 40) 3 | 50) 1 |

(50 x 2 = 100 புள்ளிகள்)

## பகுதி - II

01) அ.
- புராணங்கள், புராதனம், பழமை வாய்ந்தவையாகும்.
- பண்பாடு, சமயம், தத்துவம், கலை, இலக்கியம், வரலாற்றுச் செய்திகள் கூறப்படுகின்றது.
- தெய்வீக வரலாறுகள், தெய்வீக பரத்தவம் கூறப்படுகின்றது.
- பஞ்சலட்சணம், தசலட்சணம் போன்ற மரபுகள்
- சமயநெறிகள், வழிபாட்டு முறைகள் போன்றவனவும் மூர்த்தி, தலம், விரதம், தவம், தீர்த்தம், தலையாத்திரை தோத்திரம் போன்ற விடயங்கள் பேசப்படுகின்றது.
- மனித கடமைகள், ஆச்சிரமதர்மங்கள், புருடாத்தங்கள் போன்ற தர்மநெறிகள், சோதிடம், வானியல், சிற்பம், கலை, கணிதம் புவியியல் போன்ற அறிவியல் சிந்தனைகள்
- அரசியல், தர்மம், கலைமரபுகள் போற்றப்படுகின்றது.

ஆ.
- உலக படைப்புக்கள் பற்றிய கருத்துக்கள்
- சிவ, விஸ்ணு, சக்தி, பரத்துவங்கள்
- பிரம்மனது உந்திக் கமலத்திலிருந்து உலகம் படைக்கப்பட்டது.
- அவதார தத்துவம் - தர்மம் நிலைநாட்டும் நோக்கு தெய்வீக கதைகள், வடிவங்கள், தத்துவ நோக்குடையவை.
- தவம், விரதம், தீட்சை போன்ற ஆன்மீக நோக்குடைய தத்துவங்கள்
- சைவ சித்தாந்த தொடர்புகள்
- கடவுள், ஆன்மா, பிரபஞ்சம், கரம்வினை, மறுபிறப்பு, ஆன்மீக விடுதலை போன்ற விடயங்கள்.
- நண்பர் போல் அறிவுரை வழங்குவது.
- கோயில் வழிபாடு, உருவ வழிபாடு என்பன பற்றிக் கூறுவது.
- சமயக்கருத்துக்களை இலகுபடுத்தியும், எளிமைபடுத்தியும் கூறும்பாங்குடையது.
- அறநெறிப் போதனை புரிவது.
- இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது

- கலை

புராணங்களை அடிப்படையாகக் கொண்டு திருவுருவ வழிபாடு, சிற்பக்கலை மரபு, ஓவியக்கலை என்பன வளர்ச்சி பெற்றன.

- இலக்கியம்

இலக்கிய வடிவங்களுக்கும், குறிப்பாக பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் ஆகியவற்றுக்குப் புராணங்கள் பொருள் மரபாக அமைந்துள்ளன.

பிற்காலக் காவியங்களுக்கு புராணங்கள் முன்னோடியாக அமைந்துள்ளன.

புராண – மரபு வளர அடிப்படையானது

- சமயம்

புராணங்கள் சமய சின்னங்களுக்கு அடிப்படையாக விளங்குவன.

புராணங்கள் இறை நம்பிக்கையை வலுப்படுத்துவன.

பக்தி, தலம், தானம், விரதம், தீர்த்தம், மூர்த்தி, தவம், தியானம் முதலான சமய அடிப்படையகளைக் கூறுவன.

சிவன், பிரம்மா, விஸ்ணு, சூரியன், முருகன், சக்தி முதலான தெய்வங்களின் பரத்துவம் கூறுவன.

[6 + 6 + 8 = 20 புள்ளிகள்]

02) அ. • பல்லவர் காலம் கி.பி 580 – கி.பி850 வரை பல்லவ பாண்டியன் இணைப்புக்காலம். அரச ஆதாரமுடன் வைதீக நெறிவளர்ச்சி பெற்ற காலம் நாயன்மார்களின் முயற்சியால் மன்னர்கள் சைவசவமயம் தழுவி சைவத்தை வளர்த்தல்,நந்திக்கொடி, அரச சின்னமாகவும், சைவசின்னமாகவும் விளங்கியமை.

- அழியாப் பொருட்களைக் கொண்டு திருக்கோயில்களை அமைத்து கட்டடக்கலையோடு ஏனைய நுண்கலைகளையும் வளர்த்தனர். கல்வி விவரணங்களை காஞ்சியில் நிறுவினர். மகேந்திரவர்மன் சமயத்தோடு கலைகளையும் வளர்த்தது. சித்திகாரப்புலி, சங்கீர்ணகதி, குணபரன், விசித்திரசித்தன், பக்தன் சைவசித்தாந்த மார்க்கி என்ற பெயர்களால் சிறப்பிக்கப்பட்டமை.

ஆ. 1. மகேந்திரவர்மன் - [குடவரை / குடபோகம்]

2. நரசிம்மன் - [ரதக்கோயில் மலைதளி]

3. இராஜசிம்மன் - கற்கோயில் [கட்டுத்தளி

4. நமந்திவர்மன் - [கட்டுத்தளி]

மகேந்திரவர்மன் மலைகளைக் குடைந்து கர்ப்பக் கிருகத்தையும், ஒரு மண்டபத்தையும் அலங்கார வேலைப்பாடுகளின்றி அமைத்தான். மாமல்லன் தந்தையைப்பின்பற்றி குகைக் கோயில்களை அமைத்ததோடு தேர் போன்ற அமைப்பிலே ரதக் கோயில்களை அமைத்தான். எட்டுக் கோயில்கள் அமைக்கப்பட்டன.

"பஞ்ச பாண்டவர் ரதக் கோயில்கள் சிறப்பானவை"

இராஜசிம்மன் முதன் முதலில் கற்கோயில்களை அமைத்தவன். இதில் காஞ்சி கைலாசநாதர் கோயில் சிறப்புமிக்கது. சிற்பங்கள் அதிகம் வடிக்கப்பட்டு சிற்பக்கலைக் கூடமாக போற்றப்படுகிறது.

நந்திவர்மன் காலத்தில் முத்தேஸ்வரம், மதங்கேஸ்வரம் அமைக்கப்பட்டு கட்டக்கலை நிறைவுத்தன்மை பெறுகின்றது.

இ. கோயில்களை மையமாகக் கொண்டு கட்டட, சிற்ப, இசை, நடன, கலைகள் வளர்ச்சி பெறல், கோயில்களை மையமாகக் கொண்டு இசைக்கலை வளர்ச்சி , நாயன்மார் பாடல்கள் "தமிழோடு இசை" – "பண்ணும் பதமேழும்" - இராஜசிம்மன் "பரிவாதினி" என்ற வீணை வாசிப்பதில் கைதேர்ந்தவன் நடன, சிற்பம், நாயன்மார் பாடல் மூலம் நடனக்கலை வளர்ச்சி பெறல்.

இராஜசிம்மனது காலக் கோயில்களில் சிற்ப ஓலிய கலைமுதிர்ச்சியை காணலாம்.

[6 + 6 + 8 = 20 புள்ளிகள்]

03) அ. ● சுவாமி விபுலானந்தர் *1892. 03. 27* ஆந் திகதி தமிழ் கர வருஷம் பங்குனித் திங்கள் *16* ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்தில் மட்டுநகரின் தெற்கேயுள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தார்.

- சாமித்தம்பியாருக்கும் கண்ணம்மைக்கும் நன்மகனாக, மயில்வாகனம் என்னும் இளமைப்பெயர் கொண்டவர்.
- இளமைக் கல்வியினை கல்முனை மெதடிஸ் ஆங்கிலப் பாடசாலையிலும் பின்னர் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியிலும் பயின்றார்.
- பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கையில் கேம் பிரிஜ் ஜீனியர் கேம் பிரிஜ் சீனியர் பரீட்சைகளில் சித்தி பெற்றார்.
- கொழும்பு ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரிய டிப்ளோமா பயிற்சி பெற்றார்.
- *1920* .ல் லண்டன் B. SC விஞ்ஞானமானிப் பரீட்சையில் தேறி விஞ்ஞானப்பட்ட தாரியானார்.
- கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலை, மட்புனித மிக் கல்லூரி, யாழ் சம்பதிரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இந்துக் கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றினர்.
- *1922*ல் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடம் சுவாமி சிவானந்தரால் "பிரபோத சைதன்யர்" என்னும் பிரமச்சரிய நாமம் சூடப்பட்டது.
- *1924* ம் ஆண்டு ஞான உபதேசம் பெற்று "சுவாமி விபுலானந்தர்" என்னும் தீட்சா நாமம் பெற்றார்."

ஆ. ● இராகிருஷண பரமஷம்சர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுக நாவர் முதலான சமயப் பெரியார்களை மதித்துப் போற்றியதுடன் அவர்களுடைய போதனைகளையும், பணிகளையும் முன் மாதிரியாகக் கொண்டார்.

- சமயப் பிரசங்கம் செய்தல், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் ஈடுபட்டவர். இலங்கையில் அத்வைததோந்த மரபின் பரவலுக்கு முன்னோடியானவர்.
- சமயத்துறை சார்ந்தனவாகவும், வேதாந்த மரபு தழுவியதாகவும் அவரது கவிதைகள் காணப்படுகின்றன.

இ. ● விபுலானந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அத்தகைய கல்வி பெற வேண்டும். என்பதில் ஆர்வமுடையவராக இருந்தார்.

- சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதை வலியுறுத்தி, சென்னை மாகாண அரசின் கல்விக் குழுவுக்கு சிபாரிசு செய்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவக வித்திட்டார்.
- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலும், முதல் தமிழ் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
- "கற்ற கல்வி பிறரைப் பாதிக்கப்படாது. அது உயிர்ப் பூட்டுவது உண்மை காட்டுவது" தன்னம்பிக்கையைத்தருவது" எனும் கொள்கை உடையவராக விபுலானந்தர் விளங்கினார்.
- இராம கிருஷ்ண மிஷனுக்குரிய கல்விச் சட்டத்தை இந்துபோர்ட் இராசரெத்தினத்துடன் இணைந்து உருவாக்கினர்.
- *1925* இல் இலங்கையில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமைப் பொறுப்பை ஏற்றுதன் கல்விப் பணிகளைத் தொடர்ந்தார்.
- இலங்கையின் வடக்கு – கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றை நிறுவி நிருவகித்தார்.

Eg :- வண்ணை – வைதீஸ்வராவித்தியாலயம்
கல்லடி - சிவானந்தா ஆண்கள் பாடசாலை
ஆனைப்பந்தி - இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலை
காரைதீவு - சாரதாவித்தியாலயம்
திருகோணமலை - இந்துக்கல்லூரி

- *1926* ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலும் அநாதை ஆச்சிரமங்களை நிறுவி, அநாதைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தினார். இலங்கை கல்வித் திணைக்களத்தின் பாடநூற்சபை, கல்வி ஆய்வுச்சபை, தேர்வுச்சபை என்பவற்றின் உறுப்பினராயிருந்து கல்வித்துறைசார் பணிகளை புரிந்தனர்.
- மாணவர் நலனைக் கருதிற் கொண்டு “கலைச் சொல் அகராதியை உருவாக்கினார்.
- பாடசாலை மட்டத்தில் சமயக்கல்வி, பொதுக்கல்வி என்பன தொடர்பாகத் தொடர்ச்சியான பணிகளை ஆற்றினார்.
- வெள்ளிக் கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தல், பக்திப் பாசுரங்களைப் பாராயணம் செய்தல் சைவசமய வகுப்புக்களையும் பண்ணிசைப் பயிற்சிகளையும் நடாத்துதல்.
- சமயக் கல்வியை இளைஞர்களுக்கு ஏற்றவாறு போதித்தல் அவரது புதிய திட்டமாகும். விபுலானந்தரின் அத்தகைய திட்டம் இன்று செயல் முறைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
- இவரது கல்விப் பணிகள் அனைத்திலும் சமயம் சார் கல்விப் பணிகளே பிரதான இடத்தைப் பெறுகின்றன.

[6 + 7 + 7 = 20 புள்ளிகள்]

04) காவு + தடி

காவடியின் தோற்றம், பூர்வீகசுமை தூக்கும் செயற்பாட்டுடன் தொடர்புடையது பற்றிய விளக்கம்

காவடி அமைப்பு முறைகள்

- காவடிக்கு தேவையான பொருட்கள்
  தடி, மயில் இறகு, வேல், துணி, சலங்கைகள், மலர் மாலை
- காவடி ஆட்டத்தின் வகைகள்
  பாற்காவடி, பறவைக்காவடி, புஸ்பக்காவடி, பழக்காவடி, தானியக்காவடி
- காவடிக்கு பயன்படும் இசைக்கருவி
  உடுக்கு, சல்லாரி, பறைமேளம், சந்த இசையில் காவடி ஆடப்படும்
- காவடியின் அலங்காரப் பொருட்கள் கூறும் தத்துவங்கள்.
  வேல் - அழித்தல்
  மயில் - ஓங்காரம்
  மயிலிற்கு - மலபரிபாகம்

காவடியாட்டம் முருக வழிபாட்டுடன் தொடர்புடையது. முருகனை குழந்தை, குமரன் விருந்தன் ஆக காவடியாட்டத்தின் போது காட்சிப்படுத்தி ஆடுவர்.

- சமய சமூக முக்கியத்துவம்
  தமக்கு ஏற்பட்ட துன்பம் துயரம் நீங்கும் என்ற நம்பிக்கை.
- மென்பக்தி - பால்காவடி
  வன்பக்தி - முள்ளுக்காவடி என்பது வெளிப்பாடாகும்.

[20 புள்ளிகள்]

05) அ.
- இலங்கை நேசன் [*1877*]
- சைவ உதயபானு [1880]
- சைவ போதினி [1881]
- விஞ்ஞான வர்த்தினி [1882]
- இந்து சாதனம் [1899]

.

ஆ. ● தகவல் தொடர்புகளுக்கென உருவாக்கப்பட்ட சாதனம் இவற்றின் மூலம் பலதரப்பட்ட மக்களுக்கும் தகவல்களையோ, கருத்துக்களையோ, நோக்கங்களையோ அறிவிக்கும் முறைமை கருவி தகவல் தொடர்பு / பொசனத் தொடர்பு சாதனம் எனப்படும். மனிதனது அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத சாதனமாக அமைவது

வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, தொலைபேசி, இணையம், இறுவட்டு, ஒளிநாடா மின்வழி

இ. உ + ம் பத்திரிகை :-

- தேசிய ஒருமைப்பாட்டிற்கு உழைத்தல்.
- உண்மை செய்திகளை வழங்கல்.
- செய்திகளின் தலைப்புகளுக்கும் தேர்ந்தெடுத்த சொற்களை வழங்கும்.
- சமூக நோக்கு

  பெண்ணடிமை :- வரதட்சணை தீண்டாமை, வலோத்காரம் முதலான சமூக சீர்கோடுகளை வெளிக்கொணர்தல்.
- இனக் குழுக்களிடையே அதிக முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் வகையில் செய்தகளை வெளியிடாதிருத்தல்.
- இயற்கை காட்சிகள், விழாக்கள், சிற்பாக்கங்கள், நாடகங்கள், இலக்கியம், ஓவியங்கள், கட்டடக்கலை முதலானவற்றை காட்சிப்படுத்தல் விமர்சனம் செய்தல்.
- வரட்சி, புயல், வெள்ளப்பெருக்கு முதலான இயற்கை அழிவுகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

[3 + 7 + 10 = 20 புள்ளிகள்]

06) அ. ● சங்கரரது அதவைதத் கொள்கையிலிருந்து வேறுபட்டு வேதாந்த மரபின் மற்றுமொரு பரிமாணமாக அமைந்தது விசிட்டாத்வைதம். விசிட்ட + அத்வைத என அமையும் விசேடனங்களுக்கும் விசேடியத்துக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பே விசிட்டாத்துவைதம் விசேடமான விளக்கத்தையுடைய அத்தைவதம் விஷ்ணு பிரமம் என்ற கோட்பாட்டை கொண்டது.

ஆ. ● தத்துவத்திரயம் - சித், அசித், ஈஸ்வரன் ஆகிய மூன்றும் முக்கியமானவை.

- இறைவன் உலகு ஆன்ம தொடர்புகள் பிரிக்க முடியாதவை.
- இவை விசேட ஐக்கியமுடையவை - பிரிக்க முடியாது.

  இம்மூன்றுக்குள்ள தொடர்பு - சரீரசரீரிசம்பந்தம் உலகு, உயிர் - சரீரம்
- இவற்றிக்கிடையிலான தொடர்பை அப்பிரதக்சித்தி மூலம் விளக்குறார்.
- ஒன்று நிலை பெற மற்றொன்று அவசியம் - உயிர், உலகு நிலை பெற இறைவன் அவசியம்.
- இறைவனின் தனித்துவ தன்மைக்கு உலகு உயிர் என்பன அவசியம்.

இ. ● பிரபக்தி என்னும் சரணாகதி தத்துவம்

- கர்மம் ஞானம் மூலம் ஆன்ம விடுதலை.
- ஆன்மாக்களில் கன்ம பலன்களின் அடிப்படையில் வீடுபேறு
- கன்ம அழிவிற்கு பகவான் பேரருள் உதவும்.
- விதேக முத்தி உடல் அழிவுற்றபின் பரமபதமாகிய வைகுண்டத்தை அடைவதே முத்தியாகும்.

[6 + 8 + 6 = 20 புள்ளிகள்]

07) அ. ● ஆன்மா உண்டு என்பதற்கான பிரமாணங்கள், சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் சதசத்து பசு என ஆன்மா அழைக்கப்படுகிறது.

- பசு, பாசத்தோடு தொடர்புடையது. எனவே உயிருக்குப் பசு என்ற பெயர் சிறப்பாக உள்ளது.
- ஆன்மா அநாதியும், நித்தியமுமானது, எண்ணிக்கை அற்றது. மும்மலங்களால் கட்டுண்டது.
- சார்ந்தன் வண்ணம் காரணமாய் சதசத்து, சிற்றறிவு, சுதந்திரமற்றது.
- அறிவித்தால் அறியும் தன்மையுடையது.
- கன்ம வினைகளை அனுபவிக்கப் பிறவிகளைப் பெறும்.

ஆ. ● மும்மலத் தொடர்பாடல் மூவகை அவத்தைகள்
கேவலாவத்தை
சகலாவத்தை
சுத்தாவத்தை

ஆன்மாக்கள் மும்மலங்களால் கட்டுண்ட நிலையில் 3 வகைப்படும்.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானகலர் | - | ஆணவ மலம் மட்டும் தொடர்புள்ளவர். |
| பிரளயாகலர் | - | ஆணவம், கன்மம், என்றும் இரண்டு மலங்களும் உள்ளவர் |
| சகலர் | - | ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடையவர். |
| ஆணவம் | - | அகந்தை, மமதையை ஏற்படுத்துவது. |
| கன்மம் | - | வினைகள் பிறவிக்கு அடிப்படை |
| மாயை | - | தனுகரன் புவன போகத்திற்கு அடிப்படை ஆணவமலம் உயிரை மயக்கி ஆன்மாவின் வியாபகத்தன்மையை விளங்க விடாது மறைக்கும். |

ஆணவம் உயிரின் குணமன்று - குற்றமே அது ஆன்மாவைப் பற்றி நிற்பதை சைவ சித்தாந்தம் பல உதாரணங்கள் மூலம் விளக்கும் பாடல்களின் மூலம் விளக்குதல்.

இ. ● சைவ சித்தாந்தத்தில் உயிர்களுடன் ஒன்றாய், உடனாய் வேறாய் நிற்பான் என்பார்.

- தடத்த நிலையில் இறைவன் ஆற்றும் ஐந்தொழில்கள் ஆன்மாவுக்கு உதவும் வகை.
- படைத்தல் - தனு, கராண, புவன யோகங்களைப் படைத்தல். தோற்றுவிக்கப்பட்ட உலகு உயிர்களை உரிய கால எல்லை வரையிற் காப்பாற்றித் துணை செய்தல்.
- அழித்தல் - பல பிறவிகளிற் பிறந்திறந்து வடிலும் உயிர்களை இளைப்பாற வைத்தல்.
- மறைத்தல் - மலங்களை முதிர்விக்கும் அருடசெயல்
- அருளல் - உயிர்களின் பக்குவ நிலையில் அவற்றின் மலநாசத்தை ஒழிக்க வீடுபேறு எனும் முத்தியை அருளுவது.
- சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகள் கைகூட இறைவருள் துணை அவசியம்
- திருவருள் எங்கும் நிறைந்து விளங்கும் - வீடு பேற்றுக்கு உதவுவது. இறைவன் குருவடிவமாக வந்து உதவுவார்.

[6 + 8 + 6 = 20 புள்ளிகள்]

08) அ. ● காலம் - கி. பி 5ம் நூற்றாண்டில் கபிலரால் தோற்றம் பெற்றது.
நூல்கள் - சாங்கிய சூத்திரம்
சாங்கிய காரிகை

ஆ. ● காண்டல்
- கருதல்
- உரை

இ. ● சாங்கியம் என்பது பூரண அறிவு - அதன் கோட்பாடுகள் வருமாறு
புருடன்
பிரகிருதி
முக்குணம்
சத்காமிகவாதம் - அவற்றின் விளக்கம்.

ஈ. ● சங்கிய தத்துவங்கள்

*01.* பிராமாணம் - [பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம்]
*02.* சற்காரிய வாதம்
*03.* புருடன்
*04.* பிரகிருதி - மாயை
*05.* முக்குணம் பிரமானம் மாயை } முதலான கேட்பாடுகள் சைவ சித்தாந்தத்திற்கு முன்னோடியாகவும் வேதாந்தத்திற்கு முன்னோடியாக அமைந்தன.

[4 + 4 + 6 + 6 = 20 புள்ளிகள் ]